International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 07 Issue: 02 April to June 2025 www.irjtsjournal.org

# இரட்டைக்காப்பியங்களில் பிறன்மனை நயத்தல்

**திருமதி வீ.வெள்ளைத்துரைச்சி,**

***உதவிப்பேராசிரியர்,***

***முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,***

***தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,***

***சிவகாசி.***

**முன்னுரை**

இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி. அவ்விலக்கியங்களின் வழி மக்களின் வாழ்வியலை நாம் அறிந்துகொள்ள முடிகின்றது. பண்டைய கால மக்களின் வாழ்வியலை பண்டைய இலக்கியங்களின் வழி அறிந்துகொள்ள முடிகின்றது. பண்டைய கால மக்களின் வாழ்வியல் அகவாழ்வு, புறவாழ்வு என்ற இரு பகுப்பில் அடங்குகிறது. அகவாழ்வு என்பது குடும்ப வாழ்க்கையையும், புறவாழ்வு என்பது போர் வாழ்க்கையையும் குறிக்கிறது. அகவாழ்வுப் பண்பாடுகளில் ஒன்று ஒருவனுக்கு ஒருத்தி பண்பாடு. அப்பண்பாடு சீர்குலையும் போது மன்னர்கள் கடுமையான தண்டனை வழங்கி அப்பண்பாட்டினைச் சீர்குலையாமல் காத்துள்ளதை ‘இரட்டைக்காப்பியங்களில் பிறன்மனை நயத்தல்’ என்ற தலைப்பில் விரிவாக எடுத்துரைப்பதாக இவ்ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

**பிறன்மனை நயத்தல்**

குற்றம் புரிந்தவர்கள் யாவராயினும் தண்டிக்கப்பட வேண்டும் என்ற பொதுவான ஒப்பந்த முறையும் அதற்குத் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்ற இயைபு முறையும் அன்று இருந்தது. எவரும் செல்வத்தையும் அதிகாரத்தையும் காட்டித் தப்பித்துக்கொள்ள முடியாது. “பண்டைக் காலத்தில் மக்களிடையே நிலவிய வழக்க நெறியை (உரளவழஅ) ஒட்டியே நியாயம் வழங்கப்பட்டது. அரசனும் ஆளப்படும் மக்களும் தருமத்திற்கு அடங்கியே நடக்க வேண்டும்.”1 அரசனும் இதற்கு விதிவிலக்கல்ல. “அனைவருக்கும் பொதுவான பாரபட்சமற்ற வேற்றுமை காட்டாத நீதிமுறையை நிலைநிறுத்த சட்டம் தன்வழிச் செல்கிறது. இதனைச் ~சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்| (நுஙரயடவைல டிநகழசந டயற) என்பர். நீதி சட்டத்தின் வழிச் செல்லுகையை நல்லாட்சி முறையின் அடிப்படை விதியாகவும் கருதுகின்றனர். இதனைத் ~தருமம் தன்வழிச் செய்கை கடன்| என்றும் ~அறநெறியின் செவ்விய திறம்| என்றும் சேக்கிழார் சுட்டுகிறார்.”2

கீரந்தை என்ற அந்தணன் வெளியூருக்குச் செல்லும்போது பயந்த தன் மனைவியிடம் மன்னனின் காவல் உண்டு. அதனால் கவலைப்படாதே என்று கூறிச் செல்கின்றான் திடீரென ஒருநாள் அவ்வந்தணனின் வீட்டில் உரையாடல் சத்தம் கேட்கவும், மாறுவேடத்தில் சென்ற அரசன் கதவைத் தட்டினான். அப்பொழுது அந்தணனின் மனைவி பயந்து இதுவரைக் காத்த அரசனின் காவல் இன்று காவாதோ எனக் கேட்டாள். இதனைக் கேட்ட அரசன் கவலையுற்று, தான் செய்த தவற்றுக்கு வருந்தி தனக்குத் தானே தன் கையை வெட்டிக் கொண்டு தனக்கு தண்டனை வழங்கினான் என்பதை,

“உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்;தனன் ஒருநாள்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR 

அரைச வேலி அல்லது யாவதும்
புரைதீர் வேலி இல்லென மொழிந்து
மன்றத்து இருத்திச் சென்றீர் அவ்வழி
இன்றவ் வேலி காவாதோ எனச்
செவிச் சூட்டாணியில் புகைஅழல் பொத்தி
நெஞ்சம் சுடுதலின் அஞ்சி நடுக்குற்று
வச்சிரத் தடக்கை அமரர் கோமான்
உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை
குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து
இறைக்குடிப் பிறந்தோர்க்கு இழுக்கம் இன்மை"

(சிலம்பு.கா.23 : 42-53)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

மணிமேகலையில், உதயகுமாரன் கொலையுண்ட செய்தியை உதயகுமாரனின் தந்தையான அரசனிடம் துறவி கூறும்போது தவறு செய்வது அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை தண்டிக்க வேண்டியது மன்னனின் கடமை என்று வலியுறுத்துகிறார். அப்போது ககந்தன் என்னும் மன்னனின் கதையினைக் குறிப்பிடுகிறார். ககந்தனுடைய இளைய மகன் (இளவரசன்) காவிரியில் நீராடிவிட்டு வந்த பார்ப்பினியை(மருதி) ~நீ வா| என அழைத்தான். இதனால் வருந்திய அப்பார்ப்பினிப் பெண் சதுக்கப்பூதத்திடம் சென்றாள். பத்தினிப் பெண்டிர் பிறருடைய நெஞ்சில் புகார். நானோ பிறனுடைய நெஞ்சில் புகுந்தேன். தவமறைந்தொழுகுவோர், கணவன் அறியாது மறைந்து தீய ஒழுக்கத்திலே ஈடுபடுகின்ற ஒழுக்கங்கெட்ட பெண்கள், வஞ்சனை புரியும் அமைச்சர், பிறர்மனை நயப்போர், பொய்க்கரியாளர், புறங்கூற்றாளர் ஆகியோரைக் கொல்லும் நீ என்னையும் கொல் என்று வேண்டினாள். சதுக்கப்பூதம் அவள்முன் தோன்றி "நீ கணவரைத்தொழாமல் பிற தெய்வங்களைத் தொழுதாய், பிற சமயத்தார் கூறும் பொய்மொழிகளையும் விடுகதைகளையும் கேட்டு நகைத்தாய், திருவிழாக்களைக் காணவிரும்பினாய். எனவே நீ பெய் என்றால் மழை பெய்யாது. தீய எண்ணமுள்ள பிறர் நெஞ்சைச் சுடும் ஆற்றல் உனக்கில்லை. கற்புடைமகளிர்க்கு வேண்டாத செயல்களை நீக்கினால் நீ பெய் என்றவுடன் மழை பெய்யும்."3 எனக் கூறியது. இங்கு அப்பெண் கற்புடைய மகளிர்க்குரிய தகுதிகள் இல்லாது இருக்கிறாள் என்று குறை கூறுவதோடு குற்றம் செய்யாத அவளைத் தண்டிக்கவும் மறுக்கிறது. மனம் போனவாறு ஒழுகும் பெண்டிரைக் கட்டுவதுபோல் என் பாசக்கயிறு உன்னைக் கட்டாது என்றது. பின் ககந்தனின் இளையமகனை ஏழுநாட்களுக்குள் அரசன் தண்டிப்பான். அப்படி இல்லையென்றால் நான் தண்டிப்பேன் எனக் கூறுகிறது. ஏழாம் நாள் அவனது இளையமகனை அரசன் வாளால் வெட்டிக் கொல்கின்றான். இதனை,

"தள்ளுநீர்க் காவிரி ஆடினள் வரூஉம்
பார்ப்பனி மருதியை, பாங்கோர் இன்மையின்
யாப்பறை என்றே எண்ணின் ஆகி
காவிரி வாயிலில் ககந்தன் சிறுவன்
"நீவா" என்ன நேர்-இழை கலங்கி
……………………………………..
ஈங்குஏழு- நாளில் இளங்கொடி நின்பால்


© 2025, IRJTSR

வாங்கா நெஞ்சின் மயரியை வாளால்
ககந்தன் கேட்டுக் கடிதலும் உண்டு” என
இகந்த பூதம் எடுத்துஉரை செய்தது;அப்
பூதம் உரைத்த நாளால், ஆங்கு அவன்
தாதை வாளால், தடியவும் பட்டனன்”

(மணி.கா.23 : 39-43, 74-79)

என்ற பாடலடிகளால் அறியமுடிகின்றது. இதன்வழி தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டனை வழங்க வேண்டியது மன்னனின் இயல்பு என்பதனையும் விருப்பம் இல்லாத ஒரு பெண்ணை அடைய நினைப்பது குற்றம் என்ற அந்தக் காலமுறைமையையும் அறியமுடிகிறது.

மேலும், துறவி, உதயகுமாரனின் தந்தையான அரசனிடம் மற்றுமொரு ஒரு நிகழ்வினையும் குறிப்பிடுகிறார். தருமதத்தன் வணிகக்குலத்தைச் சார்ந்தவன். இவனுடைய மாமன் மகள் விசாகை. இவள் வீதியில் சென்றபோது இவளது அழகில் மயங்கிய ககந்தனின் மகன், மருதி என்னும் பார்ப்பனப் பெண் பொருட்டு இறந்தவனின் தமையனுமாகியவன். இவன் அவனுடைய குடுமியில் இருந்த மாலையை விசாகைக்கு அணிவிக்கும் பொருட்டு தலைக்குக் கை சென்றது. ஆனால,; அக்கை திரும்ப கீழே வரவில்லை. இதனை அறிந்த ககந்தன் தன் மகன் என்றும் பாராமல் அக்காமுகனை வெட்டி வாளுக்கு இரையாக்கி கொலைத் தண்டனை வழங்கினான் எனக் கூறுகிறார். இதனை,

“குமரி மூத்தஅக் கொடுங்குழை நல்லாள்
அமரர் அருளால், அகல்நகர் இடூஉம்
படுபழி நீங்கி, பல்லோர் நாப்பண்
கொடிமிடை வீதியில் வருவோள் குழல்மேல்
மருதி பொருட்டால் மடிந்தோன் தம்முன்
……………………………………….
மாலை வாங்க ஏறிய செங்கை
நீலக் குஞ்சி நீங்காது ஆகலின்
ஏறிய செங்கை இழிந்திலது, இந்தக்
காரிகை பொருட்டு” என, ககந்தன்கேட்டு
கடுஞ்சினம் திருகி, மகன்துயர் நோக்கான்
மைந்தன் தன்னை வாளால் எறிந்தனன்;”

(மணி.கா.22 : 143-147, 156-161)

என்ற பாடலடிகளால் அறியமுடிகின்றது.

மேலும், உதயகுமாரன் கொல்லப்பட்டதை அறிந்த அரசன் (கிள்ளிவளவன்), சோழிக வேணாதியைப் பார்த்து “தன் மகனைப் பூமியிலே கிடத்தி அவன் மீது, தேர்க்காலைச் செலுத்தி முறை செய்த அரசர்பிரானுடைய பரம்பரையில் ஒரு தீவினையாளன் பிறந்தான் என்பதை மற்றைய அரசர்கள் கேட்கு முன்னம் அவனைப் பறங்காடடைவிப்பீர்”4 என்று கூறுவதிலிருந்து அரசனுடைய நல்லாட்சி திறம் வெளிப்படுகின்றது.

**முடிவுரை**

பிறர்மனை நயந்தவனுக்கு தண்டனையாக மிகுதியும் கொலைத்தண்டனையே அளிக்கப்பட்டுள்ளதையும், அரசு ஆளும் அரசனுக்கும் இத்தண்டனையே வழங்கப்பட்டுள்ளதையும்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2025, IRJTSR 

அறிய இயலுகின்றது. பொற்கைப்பாண்டியன் தவறான எண்ணத்தில் பார்ப்பனனின் கதவைத் தட்டவில்லை எனினும் அவனுக்கு அவனே கைக் குறைப்புத் தண்டனை கொடுத்துள்ளான். பிற பிறன்மனை நயத்தல் குற்றங்கள் எல்லாம் தவறான எண்ணத்துடனே நிகழ்ந்துள்ளதால் கொலைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளதை அறியஇயலுகின்றது. இவற்றின் வாயிலாக அக்கால மக்கள் ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடு சீர்குலைந்து விடக்கூடாது என்பதற்காக கடுமையான தண்டனை கொடுத்துள்ளதை அறியஇயலுகின்றது. இதன் வாயிலாக பண்டைய கால மக்கள் தங்களது பண்பாட்டினைக் காத்துள்ளதை அறியமுடிகின்றது.

### சான்றெண் விளக்கம்

1. மா.சண்முக சுப்பிரமணியன், குற்ற இயல் சட்டம், ப.6-7.
2. மேலது,ப.7.
3. உ.வே.சா(ப.ஆ), மணிமேகலை, ப.LXXXi.
4. மேலது, ப.LXXXIv.

### துணைநூற்பட்டியல்

1. சண்முக சுப்பிரமணியன்.மா., - குற்ற இயல் சட்டம், கழக வெளியீடு, சென்னை, 1994.

2. சாமிநாதையர்.உ.வே.,(ப.ஆ) - மணிமேகலை, உ.வே.சா நூல் நிலையம், சென்னை, எ.ப. - 2008.